


**20. 12. 2025**

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, மேற்குவங்க மாநிலத்தில் 3 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான தேசிய நெடுஞ்சாலை திட்டங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டுகிறார்.

2. நாட்டின் பாதுகாப்பில் எல்லை காவல்படையினரின் பணி அளப்பரியது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா பாராட்டியுள்ளார்.

3. உலகளாவிய சுகாதார ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தியா உறுதிப் பூண்டுள்ளதாக மத்திய சுகாதார குடும்ப நலத்துறை அமைச்சர் திரு. ஜே.பி.நட்டா தெரிவித்துள்ளார்.

4. முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் 56 கோடி ரூபாய் மதிப்பிலான பொருநை அருங்காட்சியகத்தை இன்று திறந்து வைக்கிறார்.

5. சீன ஹாங்சுவில் நடைபெறும் BWF பேட்மிண்டன் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் ரான்கிரெட்டி, சிராக் ஷெட்டி இணை இன்று களமிறங்குகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மேற்குவங்க மாநிலத்தில் 3 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான 2 தேசிய நெடுஞ்சாலை திட்டங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டுகிறார்.

பராஜாகுலி, கிருஷ்ணா நகர் இடையேயான 66 கிலோ மீட்டர் தூர 4 வழி தேசிய நெடுஞ்சாலை உள்ளிட்ட விரிவாக்கப் பணிகளால் கொல்கத்தா சிலிகுரி இடையேயான பயண நேரத்தை 2 மணி

நேரமாக குறைவதுடன், பாதுகாப்பான விரைவான போக்குவரத்து சேவை உறுதி செய்யப்படும்.

இப்பகுதியின் பொருளாதார வளர்ச்சியை அதிகாித்து சுற்றுலாவை மேம்படுத்தவும் இது வகைசெய்யும்.

தொடர்ந்து ரனாகட்டில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் அவர், அசாமில் குஹாட்டி சர்வதேச விமான நிலையத்தின் புதிய முனையம் உட்பட 15 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித்திட்டங்களை தொடங்கி வைக்கிறாா்.

❖❖❖❖❖❖❖❖❖❖

சஷஷ்த்ரா

எல்லை பாதுகாப்பு படையினர், தேசப் பாதுகாப்பு அரணாக திகழ்வதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தொிவித்துள்ளாா்.

இந்திய எல்லை காவல்படை சஷஷ்த்ரா சீமாபல் அமைப்பின் நிறுவனநாள் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி அவர் வெளியிட்ட செய்தியில் இப்படையினாின் சேவை தியாகம் மற்றும் தன்னிகரற்ற பணித்திறனை இப்படையினர் வெளிப்படுத்துவதாக கூறியுள்ளாா்.

சவால்கள் நிறைந்த எல்லைப்பகுதிகளில் விழிப்புணர்வுடன் இப்படையினர் செயலாற்றுவதாக அவர் பெருமிதம் தொிவித்தாா்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா வெளியிட்ட செய்தியில், எல்லைப் பகுதிகளில் குற்ற செயல்கள் மற்றும் ஊடுருவலை தடுக்க இவ்வீரர்கள் முனைப்புடன் பணியாற்றுவதாக பாராட்டியுள்ளாா்.

தேச கட்டமைப்பிலும் நாட்டின் பாதுகாப்பிலும் இப்படை வீரர்களின் பணி அளப்பாியது என்று அமைச்சர் புகழாரம் சூட்டினாா்.

❖❖❖❖❖❖❖❖❖❖

கிாிராஜ் சிங்

ஜவுளித் துறையில் ஆராய்ச்சியின் அவசியத்தை மத்திய ஜவுளி அமைச்சர் திரு. கிாிராஜ் சிங் வலியுறுத்தி உள்ளாா்.

புதுதில்லியில் இன்று நடைபெறும் ஜவுளி ஆராய்ச்சி அமைப்பின் முதலாவது ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் உரையாற்றிய அவர்,

ஜவுளி உற்பத்தி துறையில் நவீன புத்தாக்கங்கள் அதிகாித்து வரும் இந்நிலையில் மேம்பட்ட ஆராய்ச்சி அவசியம் என குறிப்பிட்டாா்.

பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு இத்துறையில் நவீன தொழில்நுட்ப நடவடிக்கைகளுக்கு உயர் முன்னுாிமை அளித்து வருவதாக அமைச்சர் கூறினாா்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ஜே.பி.நட்டா

உலகளாவிய மற்றும் மண்டல அளவிலான சுகாதார ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தியா உறுதிப்பூண்டுள்ளதாக மத்திய சுகாதார குடும்ப நலத்துறை அமைச்சர் திரு. ஜே.பி.நட்டா தொிவித்துள்ளாா்.

புதுதில்லியில் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் புதிய சுகாதார மையத்தை இன்று பாா்வையிட்டு பேசிய அவர், இந்த மையம் தென்கிழக்கு ஆசிய மக்களின் சுகாதார மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளை ஒருங்கிணைந்து நிறைவேற்றும் என நம்பிக்கை தொிவித்தாா்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ஜெய்சங்கர்

உலகளாவிய பொருளாதாரம் மற்றும் அரசியலில் புரட்சிகரமான மாற்றங்கள் உருவாகியுள்ளதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் S.ஜெய்சங்கர் தொிவித்துள்ளாா்.

புனே Symbiosis நிகர்நிலை பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றிய அவர், நாடுகளுக்கு இடையே வர்த்தகம், எாிசக்தி, ராணுவ பாதுகாப்பு, வளங்கள், தொழில்நுட்பம் உள்ளிட்டவற்றின் அடிப்படையில் அதிகார பகிா்வு மாற்றங்களை சந்தித்து வருவதாக கூறினாா்.

இந்தியா போன்ற மிகப்பொிய பொருளாதார சக்திகள், வலுவான நவீன உற்பத்தி திறன்களை அதிகாிப்பதுடன் சவாலான தொழில்நுட்பங்களை ஈடு செய்வதன் அவசியத்தை சுட்டிக்காட்டினாா்.

உலகமயமாக்கலின் தாக்கம் நாடுகளின் அடிப்படை கொள்கை மற்றும் செயலாற்றும் திறனை மாற்றியுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினாா்.

❖❖❖❖❖❖❖❖❖❖

## விமான போக்குவரத்துறை

உலகின் 3-வது மிகப்பொாிய உள்நாட்டு விமான போக்குவரத்து சந்தையாக இந்தியா திகழ்வதாக மத்திய சிவில் விமான போக்குவரத்துறை அமைச்சகம் தொாிவித்துள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் பயணியர் போக்குவரத்து 9 சதவிகிதமும்,

சரக்கு போக்குவரத்து 2.9 சதவிகித கூடுதல் வளர்ச்சி கண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

விமான பயணிகளின் பாதுகாப்பிற்கு உயர்முன்னுாிமை வழங்கப்படும் என கூறியுள்ள அமைச்சகம், கடும் மூடுபனி நிலவும் சூழலில் அனைத்து விமானங்களும் சாாியான நேரத்தில் இயங்குவதை உறுதிசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தொாிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

## நிதிநிலை அறிக்கை

2026-27-ம் நிதியாண்டிற்கான மத்திய அரசின் நிதிநிலை அறிக்கை வரும் பிப்ரவாி மாதம் தாக்கல் செய்யப்படவுள்ள நிலையில் மக்கள் தங்கள் விருப்பங்களையும், ஆலோசனைகளையும் தொாிவிக்குமாறு மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது

அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் நாட்டின் ஒட்டுமொத்த மேம்பாடு ஆகியவற்றை கருத்தில் கொண்டு கோரப்படும் இத்தகவல்களை mygov.in இணையதளத்தின் மூலம் பொதுமக்கள் தொாிவிக்கலாம்.

❖❖❖❖❖❖❖❖❖❖

## முதலமைச்சர்

முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் 2 நாள் பயணமாக இன்று நெல்லை சென்றடைந்தார்.

நெல்லை பொருநை ஆற்றங்கரையில் 56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பொருநை அருங்காட்சியகத்தை இன்றுமாலை திறந்து வைக்கும் அவர், திருநெல்வேலியில் நாளை நடைபெறும் அரசு விழாவில் 100 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை, 44 ஆயிரத்து 924 பயனாளிகளுக்கு வழங்குகிறார்.

538 அரை கோடி ரூபாய் மதிப்பில் முடிவுற்ற பணிகளை தொடங்கி வைக்கும் முதலமைச்சர், பல்வேறு புதிய பணிகளுக்கும் அடிக்கல் நாட்டுகிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

நாகை – வாய்ஸ்

நாகை துறைமுகத்தில் பள்ளி மாணாக்கருக்கான பாய்மர படகு பயிற்சி முகாமை துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார்.

வார விடுமுறை நாட்களில் இப்பயிற்சி அளிக்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

வாக்காளர் சிறப்பு முகாம்

தமிழகத்தின் அனைத்து வாக்குச்சாவடிகளிலும், வாக்காளர் சிறப்புமுகாம் இன்றும், நாளையும் நடைபெறுகிறது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளுக்கு பின் நேற்று வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் விடுபட்ட தகுதியுடைய வாக்காளர்கள் விண்ணப்பிக்க ஏதுவாக அடுத்தமாதம் 18-ம் தேதிவரை சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் இம்முகாம்கள் நடைபெறுகின்றன.

வரும் ஒன்றாம் தேதி 18 வயது பூர்த்தி அடைந்தவர்கள் வாக்காளர் பட்டியலில் புதிதாக இடம்பெறவும் இதில் விண்ணப்பிக்கலாம்.

திருச்சி, தென்காசி, பெரம்பலூர் உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களிலும் விடுபட்ட வாக்காளர்கள் இந்த கால அவகாசத்தை முறையாக பயன்படுத்திக் கொள்ளுமாறு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

காப்புரிமை

காப்புரிமைகளை பதிவு செய்வதில் தமிழகம் நாட்டிலேயே முதன்மையாக விளங்குவதாக அரசு தெரிவித்துள்ளது.

தேசிய அளவில் தமிழகத்திலிருந்து மட்டும் 15 ஆயிரத்து 440 அறிவுசார் காப்புரிமைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மாநிலத்தில் கண்டுபிடிப்புகள் மற்றும் ஆராய்ச்சி பணிகள் விரைவுப் படுத்தப்பட்டு வருவது, கல்வி நிறுவனங்கள், தொழில்துறையினருக்கு இடையே ஒருங்கிணைந்த சூழல் நிலவுவதை இது எடுத்துரைப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

நயினார் நாகேந்திரன்

விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் குடிநீர் தட்டுப்பாட்டை போக்க மாநில அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் கண்டாச்சிபுரத்தில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற அவர், மாவட்டத்தில் சுகாதாரம், குடிநீர் வடிகால் வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டுமென்றார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

சுயஉதவிக் குழு

மகளிர் சுயஉதவிக் குழுவினரின் மாநில அளவிலான உணவுத் திருவிழா சென்னையில் நாளை தொடங்குகிறது.

பெசன்ட் நகர் கடற்கரையில் 4 நாட்கள் நடைபெறும் இந்த உணவு திருவிழாவில் செட்டிநாட்டு உணவுகள்,

திருவாரூர் பணை திண்பண்டங்கள்,

திருச்சி வரகு பிாியாணி,

நீலகிாி தேநீர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களின் பிரத்யேக உணவு வகைகள், மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் உள்ளிட்டவை இடம்பெறும்

235-க்கும் மேற்பட்ட உணவு வகைகளை உடனடியாக சமைத்து சுகாதாரமாக வழங்கும் வகையில் 38 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

❖❖❖❖❖❖❖❖❖❖

நாட்டிய விழா

இந்திய நாட்டிய விழா 2026 மாமல்லபுரத்தில் நாளை தொடங்குகிறது. இதுகுறித்து எமதுசெய்தியாளர்

❖❖❖❖❖❖❖❖❖❖

திருச்செந்தூர்

திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி கோவில் வளாகத்தில் மகிழம், வகுளம், அரளி உள்ளிட்ட பல்வேறு மரக்கன்றுகள் நடும் பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக எமது செய்தியாளர் தொிவிக்கிறாா்.

..வாய்ஸ்..

❖❖❖❖❖❖❖❖❖❖

பேட்மிண்டன்

சீன ஹாங்சுவில் நடைபெறும் BWF பேட்மிண்டன் ஆடவர் இரட்டையர் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் ரான்கிரெட்டி, சிராக் ஷெட்டி இணை - சீனாவின் Liang Wei, Wang Chang இணையை இன்று எதிா்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

கிாிக்கெட்

துபாயில் 19 வயதிற்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை ஆடவர் ஒருநாள் சர்வதேச கிாிக்கெட் இறுதி போட்டியில் நாளை இந்தியா - பாகிஸ்தானை எதிா்கொள்கிறது.

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖